# திராவிட மாடல் நல்லாட்சி நாயகர்

டி.ஆர்.பாலு
கழகப் பொருளாளர்
கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர்



ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் முதல் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடானு கோடி தொண்டர்கள் அனைவரின் இல்லத்திலும் உற்சாகத் திருவிழா. நமக்கெல்லாம் அன்றுதான் தீபாவளி என்றால் இன்னும் சாலப்பொருத்தமாக இருக்கும். ஆம், அன்றுதான் நமது கழகக் குடும்பத்தின் தலைவர், நமது ஒட்டுமொத்த அன்புக்கும் பாசத்துக்கும் போற்றுதலுக்கும் உரிய தமிழ்நாடு முதல்வர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள். அன்னை தயாளு அம்மையாரின் அருந்தவப் புதல்வர். தமிழ் மண் தழைத்தோங்க வேண்டும் என்ற தயாள நெஞ்சுடன் ஈன்றளித்த ஈடற்ற செல்வம்.

## மார்ச் முதல் நாளின் சிறப்பு

நமது தலைவர் தளபதியின் பிறந்தநாளான மார்ச் ஒன்றாம் தேதிக்கு மட்டும் ஒரு தனிச்சிறப்பு உள்ளது. அதுதான், ஆங்கிலத்தில் “ஜீரோ டிஸ்கிரிமினேஷன் டே” என்று அழைக்கப்படும் நன்னாள். அதாவது, ஏற்றத்தாழ்வு அற்ற சமநீதி நாள். மக்கள் சமுதாயம் கிஞ்சித்தும் உயர்வு தாழ்வு இல்லாமல் வாழ வேண்டுமென்ற சீரிய லட்சியத்தை நினைவூட்டும் வகையில் இந்த “ஜீரோ டிஸ்கிரிமினேஷன் டே” ஐக்கிய நாடுகள் அவையின் முடிவின்படி உலகெங்கும் உள்ள ஐ.நா. அமைப்புக்கள் மட்டுமல்லாமல் உலக நாடுகள் அனைத்தும் கொண்டாடுகின்றன.

## திராவிட மாடல் தத்துவத்தின் அடிநாதம் சமூகநீதி

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற மனித நீதி, அகிலம் போற்றும் அய்யன் திருவள்ளுவர் அருளிய உலக நீதிதான், திராவிடக் கொள்கைகளின் அடிக்கல். சமூகநீதிதான் திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சு. ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைப்பதே திராவிட மாடல் ஆட்சியின் உயரிய கொள்கையாகும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குரல் கொடுத்த ஐம்பெரும் முழக்கத்தின் முதன்மையான முழக்கம் ஆதிக்கமற்ற சமுதாயம் அமைப்போம் என்பது. மொழி சமத்துவத்தைப் போற்றிப் பாதுகாக்கும் முழக்கம் தான் இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்பது.

அதுபோல ‘மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி’ என்ற நமது முழக்கமும் இந்திய ஒன்றியத்தில் இணைந்துள்ள அனைத்து மாநிலங்களும் அரசியல் அதிகார ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமநிலையில் இருக்க வேண்டும் என்ற லட்சியத்தை அடைய வேண்டும் என்பதைத் தவிர வேறில்லை. உறவுக்குக் கை கொடுப்பதும்; உரிமைக்குக் குரல் கொடுப்பதும் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்று. இது அரசியல் சார்ந்த கொள்கை மட்டுமேயல்ல. இந்திய நாட்டின் 143 கோடி மக்கள்தொகையின் அங்கமான ஒவ்வொரு தனிமனிதனுக்கும் ஒட்டு மொத்த சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் இது பொருந்தும்.

**“ஜீரோ டிஸ்கிரிமினேஷன்” தத்துவத்தில் கலைஞர் வகுத்தளித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாரக மந்திரங்களான ஐம்பெரும் முழக்கங்கள் அடங்கியுள்ளன என்பதை எண்ணிப் பார்க்கும்போது கழகத்தைக் கட்டிக் காக்கும் பெரும் பொறுப்பை தலைமேல் ஏற்றிருக்கும் நம்மை இறும்பூது கொள்ள வைக்கிறது. திராவிட இயக்க தீபம் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கலங்கரை விளக்கத்தை உருவாக்கி ஒளிர வைத்து தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் வழிகாட்டியாக என்றென்றும் திகழும் நமது ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் சென்றால்தான் நமது லட்சியப் பயணம் வெற்றி அடையும். எனவேதான், முத்தமிழறிஞர் கலைஞர் பெருமான் அவர்கள், அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்று ஐம்பெரும் முழக்கங்களின் முதல் முழக்கமாக இயற்றினார்.**

## எது திராவிட மாடல்?

இன்று அண்ணா காட்டிய வழியில், கலைஞர் உருவாக்கித் தந்த ஐம்பெரும் முழக்கங்களைச் செயல்படுத்தி, ஏற்றத்தாழ்வு அற்ற தமிழ்ச் சமுதாயத்தை, திராவிட இனத்தை தலைமையேற்று முன்னெடுத்துச் செல்லும் பெரும் பொறுப்பை தளபதி ஸ்டாலின் அவர்கள் பெற்றிருப்பது நமக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு. அதிலும் மார்ச் திங்கள் முதல் நாள் பிறந்த நம் தலைவர் தளபதி அவர்கள், இந்த வரலாற்றுச் சாதனையை நிறைவேற்றி வருவது மிகவும் பொருத்தமானதாகும். காலம் நமக்கு அளித்துள்ள அருட்கொடை இதுவென்று சொன்னால் மிகையாகாது. அந்த வகையில் தலைவர் தளபதி அவர்கள், திராவிட மாடல் பற்றி விளக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. இன்றைக்கு தமிழ்நாடு அரசியல் திடலில் “ஜீ பூம்பா” வகை திடீர் அரசியல் தலைவர்கள், திராவிடம் மாயை என்று புலம்புவதைக் கேட்க முடிகிறது. அந்தத் திடீர் அரசியல் அதிசயங்கள் நேற்று பெய்த மழையில் முளைத்து நாளை வரும் உதய சூரியனின் வெம்மையில் கருகிப் போகவுள்ள காளான்கள், களைகள் எல்லாம் புரிந்து கொள்ள வேண்டி திராவிட மாடல் என்றால் என்னவென்று தளபதி அவர்கள் எளிய மொழியில் எடுத்துக் கூறியுள்ளார்.

திராவிட மாடல் எவரையும் ஏற்றத்தாழ்வு கூறி பிரித்து வைக்காது; மாறாக அனைவரையும் இணைத்து வைப்பது. திராவிட மாடல் என்பது எவருக்கும் தீங்கிழைக்காது; மாறாக நன்மை செய்வது. திராவிட மாடல் என்பது எதனையும் அழிக்காது, மாறாக நல்லவற்றை உருவாக்கவல்லது. திராவிட மாடல் என்பது எல்லாருக்கும் எல்லாம் என்பது; ஒரு சிலருக்கு மட்டுமே எல்லாம் என்பதல்ல என்று மாற்றாரும் புரிந்து கொள்ளும் வகையில்; உணர்ந்து கொள்ளும் வகையில் திராவிட மாடல் என்பது என்ன என்று எளிய மொழியில் மிக அழகாகக் கூறியுள்ளார் தளபதி அவர்கள்.

## தளபதியின் இரண்டு கனவுகள்

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று திராவிட மாடல் ஆட்சியை சிறப்புடன் நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள், தனது கனவு என இரண்டு லட்சியங்களை அண்மையில் தெரிவித்தார். இவை மிக உயர்ந்த லட்சியக் கனவுகள். தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் தலைநிமிரச் செய்யும் கனவுகள் அவை இரண்டும். ஒன்று தமிழ்நாட்டின் பொருளாதார வளம் ஒரு டிரில்லியன் டாலர்கள் அளவுக்கு, அதாவது தமிழகத்தின் உற்பத்தி ஆண்டுக்கு எண்பது லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு பெருக வேண்டும் என்பது. எத்தகைய பிரம்மாண்டமான பொருளாதார வளர்ச்சி இது.

இந்தக் கனவை ஒரு வாக்குறுதியாக, இலக்காக திராவிட முன்னேற்றக் கழகம் 2021 சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளது. தளபதி அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே தேர்தல் வாக்குறுதியாக அளித்த அந்த இலக்குதான் இன்று அவரின் லட்சியக் கனவாகத் திகழ்கிறது. ஒரு டிரில்லியன் டாலர் அளவுக்கு தமிழ்நாட்டின் பொருளாதாரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற லட்சியம், கனவு 2030இல் மெய்ப்பட வேண்டும் என்பதுதான் முதல்வர் தளபதி அவர்களின் ஆசை. அதனைச் சாதித்துக் காட்ட வேண்டும் என்ற தணியாத தாகத்துடன் புயல் வேகத்தில் சுழன்று பணியாற்றி வருகிறார் தளபதி அவர்கள். அதன் விளைவாகத்தான் தமிழ்நாடு கடந்த மூன்று ஆண்டுகளில் ஆறு கோடியே அறுபது லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அந்நிய முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாடு இன்று இந்தியாவில் முன்னிலை வகிக்கிறது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது பழமொழி.

அதைப்போல தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் அசுர வேகத்தில் தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் பயணிக்கிறது.

**2021 முதல் தளபதி ஆட்சியில் தமிழகத்தில் வேளாண்மைக்கு என தனி பட்ஜெட். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்துக்கும் இல்லாத தனிச் சிறப்பு. இதனால் வேளாண் துறையும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உச்சத்துக்குக் கொண்டு செல்ல உறுதுணை புரியும். அந்த வகையில், தளபதியின் கனவான ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது வெகு விரைவில் நனவாகிடும் என்பது திண்ணம்.**

தலைவர் தளபதி அவர்களின் இரண்டாவது கனவு மிகவும் பிரம்மாண்டமானது. இதுகாறும் இத்தகைய கனவை எவரும் எண்ணிப் பார்த்தது இல்லை. ஆம்! தமிழ்நாட்டை உலகளவில் மனித ஆற்றலின் தலைநகராக ஆக்கிட வேண்டும் என்பதே. மேம்போக்காக பார்த்தால் இது சாத்தியப்படக் கூடியதா? என்றுதான் பலரும் கருதுவர். ‘கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி’ நம் தமிழ்க் குடி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஈடு இணையற்ற இலக்கிய வளம் கொண்ட மொழி தமிழ் மொழி. உலகத்தில் எந்த மொழிக்கும் இல்லாத இப்பெருமை தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணை கட்டிய பொறியியல் அறிவுக்கும் திறனுக்கும் சொந்தக்காரர்கள் நாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்ட தஞ்சைப் பெரிய கோயிலின் அழகையும் கம்பீரத்தையும் பார்த்து உலகமே வியந்து நிற்கிறது.

**இன்றைக்கு இந்திய அளவில் தமிழ்நாடு மருத்துவத் தலைநகராகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் பயின்று பட்டம் பெற்ற மென்பொருள் பொறியாளர்கள், கணினிப் பொறியாளர்கள் உலகின் மாபெரும் நிறுவனங்களில் முக்கிய பொறுப்புகளில் விளங்குகிறார்கள். எனவே, தமிழ்நாடு புத்துலகில் மனித ஆற்றல் துறையில் தலைநகராக ஆவது என்பது ஒரு கனவாக இருக்கலாம். ஆனால், அந்தக் கனவு நனவாகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பது மட்டும் உறுதி. காரணம், எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியராகப் பெறின். தளபதி இந்த திருக்குறளுக்கு வாழும் உதாரணமாகத் திகழ்பவர். அவர் தொட்டதெல்லாம் பொன்னாகும். தேர்தல் களத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர் நிகழ்த்திக் காட்டியுள்ள அபாரமான தொடர் வெற்றிகளே அதற்குச் சான்று பகரும்.**



## 2024 ஒன்றியத்தில் நமது அரசு

தலைவர் தளபதி அவர்களின் கனவுகள் நனவாகிட, ஓரிரு மாதங்களில் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளையும் நமது அணி வெல்ல வேண்டும். அப்போதுதான் இந்திய ஒன்றியத்தை ஆளப்போகும் அரசு நமது அரசாக, நமக்கு அனைத்து வகையிலும் துணை நிற்கும் அரசாக இருக்கும். எனவே, இந்த எண்ணத்தை நெஞ்சில் நிறுத்தி, தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்துவோம், தமிழ்நாட்டை உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்க அவர் மேற்கொண்டுள்ள அரும் பெரும் முயற்சிகளுக்குத் துணை நிற்போம் என்று சூளுரைத்து தளபதியின் 71வது பிறந்த நாளில் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைக் கூறி மகிழ்வோம்.

**இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?**

## பின்வாங்க மாட்டோம்!



தமிழ்நாட்டில் எந்தத் தனிமனிதருக்கும் அரசாங்கத்திடம் கோரிக்கை வைக்க மனு இல்லாத ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அதுதான் என் இலட்சியம். எந்த நிலையிலும் இதிலிருந்து நாங்கள் பின்வாங்க மாட்டோம்.

திராவிட இயக்கம் என்பதே அறிவியக்கம்தான். நூற்றாண்டுகளாய் அடிமைப்படுத்தப்பட்டிருந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு சுயமரியாதையையும், பகுத்தறிவையும் ஊட்டியது திராவிட இயக்கம்தான்!

முதல்வர் **மு.க.ஸ்டாலின்**